# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 5. மாநாடுகள் / கருத்தரங்குகள் நடத்துதல் / வர்த்தகக்குறி வெளியிடுதல்

தற்போதைய சூழ்நிலையில் கருத்தரங்குகள் / மாநாடுகள் நடத்துவதை முடிந்தவரை குறைக்க வேண்டும். மின்னஞ்சல்களுக்கு மேலதிகமாக, குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு இணையத்தின் ஊடாக ஸ்கைப், ஜூம், வாட்ஸ்அப், வைபர் மற்றும் ஐஎம்ஓ போன்ற தளங்களை உபயோகிக்கலாம். நேரில் சந்தித்து கூட்டங்கள் நடாத்துவது அவசியம் என்று கருதப்படும் சந்தர்ப்பங்களில் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**பிரத்தியேக தகவல்கள் / வழிகாட்டல்கள்**

**மாநாடு / கருத்தரங்கின் அமைப்பாளர்களுக்கு**

- கூட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பிரத்தியேக முற்தடுப்பு ஏற்பாடுகள் குறித்த விபரங்களுடன் இந்த வழிகாட்டல்களையும் கூட்டத்திற்கு முன்பாகவே அதில் பங்குபற்ற உள்ளவர்கள் மத்தியில் சுற்றோட்டம் செய்யுங்கள்.
- கூட்டத்தின் தொடக்கத்திலும், இடைவேளையின் போதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட வேண்டும்
- பங்குபற்றுபவர்களது தொடர்பு விவரங்களுடன் கூடிய பெயர்ப் பட்டியல் பேணப்பட வேண்டும்
- பங்குபற்றவுள்ள எவராவது இருமல், தடிமல் அல்லது தொண்டை நோவு போன்ற சுவாச நோய் அறிகுறிகளைக் கொண்டிருந்தால் அவர்களை வீட்டில் இருக்கும்படியும் கூட்டத்தில் நிகழ்நிலை அல்லது தொலைபேசி வழியாகக் கலந்து கொள்ளும்படியும் ஆலோசனை வழங்குங்கள்
- பங்குபற்றுனர்கள் கூட்டத்திற்கு வருகை தருவதற்கு பொது வாகனங்களை (குழுப் போக்குவரத்து) பயன்படுத்துவதனைத் தவிர்க்குமாறு அல்லது குறைக்குமாறு ஆலோசனை வழங்கவும்.
- பங்குபற்றும் அனைவருக்கும் சவர்க்காரம் நீர் ஆகியவற்றுடன் கூடிய கைகழுவும் (காலால் இயக்கப்படும் அல்லது உணர்வியால் (sensor) இயக்கப்படும் நீர்த்தொட்டி விரும்பப்படுகிறது )வசதிகளை ஏற்படுத்தவும் அல்லது கைதூய்மிப்பான்களை வழங்கவும். அனைத்து பங்குபற்றுனர்களும் கூட்ட வளாகத்தினுள் பிரவேசிக்க முன்னரும் கூட்டம் முடிவடைந்து வெளியேறும் போதும் தமது கைகளைக் கழுவிக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.
- கூட்டம் நடக்கும் இடத்தினை இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் நல்ல காற்றோட்டத்துடன் வைத்திருங்கள்.
- கதவு கைப்பிடிகளை மக்கள் தொடுவதைத் தவிர்க்கும்பொருட்டு கூட்டம் நிகழும் இடத்திற்கு செல்லும் அனைத்துக் கதவுகளையும் இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் திறந்தே வைக்கவும்.
- அனைத்து பங்குபற்றுனர்களுக்கு இடையிலும் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணும் வகையில் கூட்ட மண்டபத்தில் இருக்கை வசதிகளை ஏற்பாடு செய்வதுடன் நேருக்கு நேர் அமரும் வகையில் இருக்கை வசதிகளை மேற்கொள்ளாது தவிர்க்கவும்.
- சகல பங்குபற்றுனர்களும் கை குலுக்குதல் முதலான உடல்ரீதியிலான தொடுகைகள் எதிலும் ஈடுபடலாகாது. அத்துடன் அவர்கள் கூட்டம் நிறைவடையும் வரையில் தமக்கிடையில் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணிக்கொள்ள வேண்டும்.
- வரவுப் பதிவேட்டிலோ அல்லது பிற ஆவணங்களிலோ ஒப்பமிடுவதற்குப் பொதுவான எழுதுகோல்களைப் (பேனா) பாவிக்கக் கூடாது. எவ்விதமான ஆவணங்களையோ அல்லது பொருட்களையோ ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு அனுப்பும் முறை ஊடாக அனைவரது பார்வைக்கும் அனுப்பும் செயற்பாட்டினைச் செய்யக் கூடாது.
- பண்பலை ஒலிவாங்கிகள் மற்றும் வெண்பலகை எழுதுகோல்களை (Magi board markers) ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பகிர வேண்டாம்
- கூட்டத்தில் உணவு மற்றும் பானங்கள் பரிமாறப்பட்டால், அவ்வாறு பரிமாறுவதற்கு முன்னதாக உணவைக் கையாளும்/பரிமாறும் நபர்கள் சவர்க்காரம் மற்றும் நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தமது கைகளை உரிய முறைப்படி கழுவிக் கொள்வது அத்தியாவசியமாகும்.
- பங்கேற்பாளர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட பணியாளர்கள் மூலம் உணவு பரிமாறப்படலாம். பரிமாறும் மேசையைச் சுற்றி கூட்டம் கூடாமல் இருப்பதையும், தேனீர் இடைவேளையின் போது

அரட்டை/சந்திப்புகளை மேற்கொள்ளாமல் இருப்பதையும் உறுதிப்படுத்துக. எமக்கு நாமே பரிமாறுவதைக் காட்டிலும் வேறு ஒரு நபர் உணவு பரிமாறுவது நன்று.

- பயன்படுத்திய மெல்லிழைத் தாள்கள், கைதுடைக்கும் கடதாசிகள் மற்றும் பாவித்தபின் வீசிவிடும் பொருட்களை இடுவதற்கென மூடிய குப்பைத் தொட்டி ஒன்று வைக்கப்பட வேண்டும்.
- முடிந்தவரை வழிப்பதனாக்கியைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். விசிறிகள் குறைந்த வேகத்தில் இயக்கி அறையில் சரியான இயற்கை காற்றோட்டம் பரிந்துரைக்கப்படுகிறது.
- மதுபானம் பரிமாற அனுமதிக்கப்படக்கூடாது
- ஒப்பனை நடனக் கலைஞர்களே செய்தால் மட்டுமே அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள், மேலும் அதிகபட்சமாக நடனக் கலைஞர்கள் I மீட்டர் இடைவெளியை எப்போதும் வைத்திருப்பதுடன் நான்கு பேருக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.
- வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாகத்தின் உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**மாநாடு / கருத்தரங்கில் பங்கேற்பவர்களுக்கு**

- உங்களுக்கு சுவாச நோய் அறிகுறிகள் இருந்தால் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம்.
- மாநாடு / கருத்தரங்கு முடியும்வரை ஒருவருக்கு ஒருவர் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணவும் (பதிவு மேற்கொள்ளும் போது, இருக்கைகளில் இருக்கும் போது, மற்றும் தேனீர் இடைவேளையின் போது உள்ளிட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும்).
- முகக்கவசம் சரியாக அணியப்பட வேண்டும்.
- அறைக்குள் நுழையும்போதும் வெளியேறும்போதும் கைகழுவுவதற்கான வசதிகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் உங்கள் கரங்களை சவர்க்காரமும் நீரும் கொண்டு அல்லது கைதூய்மிப்பான் மூலம் தொற்றுநீக்கிக் கொள்ளுங்கள்.
- பிற பங்கேற்பாளர்களுடன் சகலவிதமான உடல் தொடுகைகளையும் தவிர்க்கவும்.
- அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் மேற்பரப்புகளை அனாவசியமாகத் தொட வேண்டாம். உதாரணம். கதவுக் கைப்பிடி.
- உங்கள் தனிப்பட்ட பேனா, புத்தகம், தண்ணீர் போத்தல் போன்றவற்றை வைத்திருங்கள்

**அறிவுறுத்தும் முறைகள்**

- கூட்டத்திற்கு முன்னதாக மின்னஞ்சல் வழியாக அறிவுறுத்தல்களைச் சுற்றோட்டம் செய்க.
- கூட்டத்தின் தொடக்கத்திலும், தேநீர் / மதிய உணவு இடைவேளையிலும் அறிவுறுத்தல்களைத் தெரிவிக்கவும்.
- இவ்வாறான கூட்டங்களை நடத்த வேண்டிய இடங்களில், விதிமுறைகளைக் காட்சிப்படுத்துவதற்குப் பதாகைகளைப் பயன்படுத்தலாம்.



**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020